ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2022 நவெம்பர் 04

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2022 செத்தெம்பர்

## பொதுநோக்கு

2022 செத்தெம்பரில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் வலுவடைந்த அதேவேளையில், உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கும் வகையில் இறக்குமதிச் செலவினம் தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 செத்தெம்பரில் (ஆண்டிற்காண்டு) குறிப்பிடத்தக்கதொரு சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 செத்தெம்பரில் சிறிதளவில் அதிகரித்துக் காணப்பட்டன (ஆண்டிற்காண்டு). சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022இன் அதே காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. அரச பிணையங்கள் சந்தையிலும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடு 2022 செத்தெம்பர் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. மத்திய வங்கி அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிக்கும்பொருட்டு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையைத் தொடர்ந்தும் வழங்கியமையானது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் திரவ மட்டத்தினைக் குறைவடையச் செய்துள்ளது. அதேவேளை, வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடனடிச் செலாவணி வீதமானது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றிற்கு ஏறத்தாழ 362 ரூபாவாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | செத்தெம்பர் 2021 ஐ.அ.டொ.மில் | செத்தெம்பர் 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-செத் 2021 ஐ.அ.டொ.மில் | சன-செத் 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,034 | 1,079 | 4.3 | 8,938 | 9,981 | 11.7 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,526 | 1,284 | -15.8 | 14,938 | 14,085 | -5.7 |
| வர்த்தக மீதி | -492 | -206 | | -5,999 | -4,104 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 35 (ஆ) | 54 (இ) | 51.8 | 99 (ஆ) | 946 (இ) | - |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 353 | 359 | 1.7 | 4,577 | 2,574 | -43.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | -34 | 41 | | -215 | 138 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 477 | 39 | | 1,906 | 1,798 (உ) | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | 1 | 39 | | 16 | 54 | |
| நீண்ட காலக் கடன்கள் | 166 | வி.கி | | 1,080 | 1,743 (உ) | |
| கூட்டுக் கடன்கள் | 310 | - | | 810 | - | |
| திரண்ட நிலுவை | | | | -2,573 | -2,927 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2021 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றுக்கு சராசரி செலவிடும் மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2022 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(உ) நீண்ட காலக் கடன்களுக்கான ஒன்றுசேர்ந்த தரவு 2022 ஓகத்து வரையான வெளிநாட்டுக் கடன்களை மட்டும் உள்ளடக்கின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு மீதியானது 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 492 மில்லியன் மற்றும் 2022 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 261 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 206 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை 2021 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,999 மில்லியனிலிருந்து 2022இன் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,104 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 1.1 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம் 1: 2022 சனவரி – செத்தெம்பர் காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: 2022 சனவரி – செத்தெம்பர் காலப்பகுதியில் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் துணைத்துறைகளில் ஏற்பட்ட மாற்றம் (ஐ.அ.டொ. மில்)**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2021–2022)**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: வர்த்தக மாற்று விகிதம் (2021-2022)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 செத்தெம்பரிலும் பார்க்க 2022 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 1,079 மில்லியனிற்கு 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இருப்பினும், வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் (ஐ.அ.டொலர் 1,224 மில்லியன்) 2022 செத்தெம்பரில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளின் வருவாய்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட வேளையில், கனிப்பொருள் ஏற்றுமதிகளில் சிறிதளவிலான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. 2022 சனவரி-செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள், கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மேம்பாடுகளினால் தூண்டப்பட்டு கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியிலும் பார்க்க 11.7 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 9,981 மில்லியனாக விளங்கின.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 4.2 சதவீதத்தினால் அதிகரித்தன. புடவைகள், பொறி மற்றும் எந்திரவியல் (முக்கியமாக இலத்திரனியல் சாதனம் மற்றும் இயந்திரவியல் சாதன பகுதிகள்), மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், போன்ற பாரிய ஏற்றுமதிப் பிரிவுகள் இவ்வதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தன. ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த பெரும்பாலான பாரிய சந்தைகளுக்கான ஆடைகளின் ஏற்றுமதிகள் மேம்பட்டன. அநேகமான வேறு கைத்தொழில் ஏற்றுமதி வகைகளும் குறிப்பாக, தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள், மற்றும் அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பொருட்கள் மேம்பட்ட செயலாற்றமொன்றை காண்பித்தன. மாறாக, பெற்றோலியப் பொருட்கள், இறப்பர் பொருட்கள் (முக்கியமாக, இறப்பர் கையுறைகள்), உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, அச்சிடல் கைத்தொழில் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2022 செத்தெம்பரில் வீழ்ச்சிகளைக் (ஆண்டிற்காண்டு) காண்பித்தன. சராசரி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு மத்தியில் நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் குறைந்தளவிலான விநியோகித்தின் காரணமாக, பெற்றோலிய பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 செத்தெம்பரில் 44.1 சதவீதத்திற்கு (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தது.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** பதப்படுத்தப்படாத புகையிலை மற்றும் காய்கறிகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிறிதளவில் அதிகரித்துக் காணப்பட்ட அதேவேளையில் தேயிலை, சிறு வேளாண்மை உற்பத்திகள் (பிரதானமாக, உண்ணத்தக்க விதைகள்) மற்றும் வாசனைத் திரவியங்கள் (பிரதானமாக, கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி) என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்ததன் காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 4.5 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. முன்னைய ஆண்டை விட இறக்குமதி அளவுகள் குறைவடைந்தபோதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் அதிகரித்த அலகு விலைகளால் தேயிலையிலிருந்தான வருவாய்கள் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. இருப்பினும், தெங்கு சார்ந்த உற்பத்திகள் (முதன்மையாக, தும்புகள், தேங்காயத் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய்), கடலுணவு (முதன்மையாக, கூனி இறால் மற்றும் இறால்) மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** அரிதான உலோகங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2021 செத்தெம்பரில் 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

---

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளது.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்**: 2022 செத்தெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 6.7 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 11.8 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) மேம்பட்டமையானது 2022 செத்தெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்ந்தளவிலான ஏற்றுமதி விலைகளால் பங்களித்திருக்கலாமென்பதை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்**: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்**: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




**மூலம்**: இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | செத்தெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | செத்தெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **808.8** | **842.8** | **4.2** | **6,903.1** | **8,000.6** | **15.9** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 43.7 | 39.8 | -8.9 | 397.7 | 405.8 | 2.0 |
| விலங்குத்தீன் | 8.4 | 9.5 | 14.1 | 85.9 | 118.8 | 38.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 458.5 | 481.5 | 5.0 | 3,893.3 | 4,577.2 | 17.6 |
| இதில் ஆடைகள் | 421.7 | 442.8 | 5.0 | 3,544.3 | 4,215.9 | 18.9 |
| புடவைகள் | 27.3 | 29.6 | 8.3 | 254.8 | 270.5 | 6.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.4 | 9.2 | -3.0 | 94.2 | 90.7 | -3.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 90.9 | 78.9 | -13.2 | 772.6 | 755.1 | -2.3 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.5 | 46.9 | 129.1 | 199.5 | 325.7 | 63.2 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 37.4 | 52.0 | 38.9 | 366.5 | 427.9 | 16.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 8.5 | 9.2 | 8.0 | 83.3 | 98.6 | 18.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 53.7 | 30.0 | -44.1 | 348.6 | 439.9 | 26.2 |
| இரசாயன உற்பத்திகள் | 19.2 | 20.6 | 7.2 | 162.9 | 171.4 | 5.2 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.2 | 11.5 | 13.3 | 92.8 | 107.3 | 15.6 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 4.6 | 1.5 | -67.5 | 40.1 | 39.4 | -1.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 5.5 | 9.4 | 70.1 | 39.3 | 63.6 | 61.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.5 | 5.5 | -15.0 | 57.2 | 48.8 | -14.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 11.2 | 14.4 | 28.1 | 111.3 | 134.6 | 20.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.1 | 3.7 | 20.8 | 27.8 | 29.7 | 6.8 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 26.8 | 28.2 | 5.1 | 224.3 | 256.9 | 14.6 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **221.2** | **231.2** | **4.5** | **1,986.7** | **1,939.8** | **-2.4** |
| தேயிலை | 104.1 | 117.8 | 13.2 | 986.6 | 937.1 | -5.0 |
| இறப்பர் | 5.2 | 3.3 | -36.1 | 32.5 | 32.7 | 0.9 |
| தேங்காய் | 35.8 | 29.7 | -17.1 | 312.7 | 314.0 | 0.4 |
| வாசனைத்திரவியங்கள் | 37.3 | 40.6 | 8.8 | 319.6 | 274.1 | -14.3 |
| காய்கறிகள் | 1.9 | 2.3 | 21.7 | 20.3 | 19.8 | -2.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.1 | 2.1 | 88.8 | 22.5 | 17.8 | -21.1 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 13.3 | 18.6 | 39.7 | 104.4 | 138.9 | 33.0 |
| கடலுணவு | 22.6 | 17.0 | -24.9 | 188.1 | 205.3 | 9.2 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.1** | **3.0** | **-1.7** | **33.8** | **24.1** | **-28.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.4** | **1.8** | **35.4** | **14.9** | **16.6** | **11.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,034.5** | **1,078.9** | **4.3** | **8,938.5** | **9,981.1** | **11.7** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2021 செத்தெம்பரில் மற்றும் 2022 ஓகத்தில் முறையே பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,526 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 1,486 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 1,284 மில்லியனிற்கு 15.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிகளை சுருக்குவதற்கான வழிமுறைகளின் முக்கிய விளைவாக முதலீட்டுப் பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி செலவினத்தில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், இடைநிலைப் பொருட்கள், உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகளில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இறக்குமதிச் செலவினம் 2021 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரை பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 14,938 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 14,085 மில்லியனாக விளங்கியது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான குறைந்த செலவினத்தினால் உந்தப்பட்டு, நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினம் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில், 2022 செத்தெம்பரில் 35.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சியானது மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் (முக்கியமாக, தடுப்பு மருந்துகள் மீதான உயர் தளத்திலான செலவினம்), தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக, கையடக்க தொலைபேசிகள்) மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் (முக்கியமாக, தொலைக்காட்சிகள்) போன்ற இறக்குமதிகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் அனைத்து துணைத்துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, முக்கியமாக சீனி மற்றும் தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (முதன்மையாக அரிசி) போன்றவற்றின் இறக்குமதி அளவுகளின் அதிகரிப்பொன்றுடன் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி மீதான செலவினமானது 2022 செத்தெம்பரில் 10.7 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரிக்கப்பட்டது. மேலும், தானியங்கள் மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகளும் ஓரளவிற்கு மேம்பட்டன. மாறாக, பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் (முக்கியமாக தேங்காய் எண்ணெய்), கடலுணவு (முக்கியமாக உலர்ந்த மற்றும் புதிய மீன்), மற்றும் பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பன மீதான செலவினம் தாழ்ந்தளவிலான இறக்குமதி அளவுகளினால் பெருமளவு உந்தப்பட்டு 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** எரிபொருளின் அதிகரித்த இறக்குமதிகளினால் கணிசமானளவில் பங்களிக்கப்பட்டு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 7.7 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இறக்குமதி அளவுகளினதும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளினதும் அதிகரிப்பு காரணமாக, மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பவற்றினை உள்ளடக்கிய எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில், 2022 செத்தெம்பரில் 87.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 யூனிலிருந்து நிலக்கரி இறக்குமதி அளவுகள் சிறிதளவு மட்டங்களில் தொடர்ந்திருந்தது. மேலும், வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் (முதன்மையாக கைத்தொழில்சார் வைரங்கள்), மற்றும் வளமாக்கி (முதன்மையாக, யூரியா) போன்றன மீதான இறக்குமதி செலவினமும் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில், 2022 செத்தெம்பரில் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, அடிப்படை உலோகம் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முக்கியமாக துணிகள்), ஊர்திகள் மற்றும் இயந்திரவியல் பாகங்கள் (முக்கியமாக உந்து ஊர்தி பாகங்கள்), உணவு தயாரிப்புக்கள் (முக்கியமாக கொழுப்பு மற்றும் எண்ணெய்), கோதுமை மற்றும் சோளம் உள்ளடங்கலான ஏனைய பல்வேறு இடைநிலைப் பொருட்களில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**முதலீட்டுப் பொருட்கள்:** சகல துணைத்துறைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 53.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. கடத்திச் சாதனங்கள் மற்றும் கணனிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் காரணமாக பொறி மற்றும் சாதனங்களின் இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்கதொரு குறைப்பு பதிவுசெய்யப்பட்டது. இரும்பு மற்றும் உருக்கு (முதன்மையாக இரும்புக்

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது.

கம்பிகள் மற்றும் தடிகள்) மற்றும் இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள் என்பவற்றின் குறைந்தளவிலான இறக்குமதிகளின் முக்கிய காரணமாக கட்டடவாக்கப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது. புகையிரத சாதனங்களின் குறைந்தளவிலான இறக்குமதிகளின் முக்கிய காரணமாக போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2022 செத்தெம்பரில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 25.6 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 13.1 சதவீதத்தினால் அதிகரித்தமையானது 2022 செத்தெம்பரில் இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சிக்கு அளவுத் தாக்கத்தினால் உந்தப்பட்டமையே முக்கிய காரணமென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 8: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 9: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 10: மாதாந்த இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | செத்தெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | செத்தெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **310.7** | **201.1** | **-35.3** | **2,890.0** | **2,146.7** | **-25.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 109.8 | 121.5 | 10.7 | 1,261.7 | 1,227.7 | -2.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.0 | 30.0 | 887.5 | 27.4 | 315.4 | 1,049.7 |
| பால் உற்பத்திகள் | 39.4 | 9.5 | -75.9 | 270.6 | 184.1 | -32.0 |
| காய்கறிகள் (ஆ) | 23.9 | 23.5 | -1.7 | 302.6 | 249.7 | -17.5 |
| கடலுணவு | 9.5 | 3.7 | -61.0 | 92.0 | 53.0 | -42.4 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 3.4 | 31.8 | 829.7 | 214.7 | 180.6 | -15.9 |
| வாசனைத்திரவியங்கள் | 7.9 | 11.7 | 48.6 | 98.4 | 104.9 | 6.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.5 | 11.3 | -49.9 | 255.8 | 140.0 | -45.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 201.0 | 79.6 | -60.4 | 1,628.3 | 919.0 | -43.6 |
| தனியாள் ஊர்திகள் | 2.1 | 0.7 | -64.4 | 9.9 | 6.5 | -34.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 108.7 | 44.5 | -59.0 | 640.7 | 392.0 | -38.8 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 15.0 | 4.1 | -72.6 | 194.8 | 75.4 | -61.3 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 18.1 | 11.3 | -37.4 | 156.8 | 169.9 | 8.4 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.1 | 4.1 | -82.9 | 307.2 | 54.0 | -82.4 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 14.5 | 5.6 | -61.3 | 118.1 | 92.5 | -21.7 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 18.4 | 9.1 | -50.6 | 200.8 | 128.7 | -35.9 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **848.4** | **913.4** | **7.7** | **8,790.8** | **9,497.4** | **8.0** |
| எரிபொருள் | 201.0 | 376.4 | 87.3 | 2,596.8 | 3,694.3 | 42.3 |
| இதில் மசகெண்ணெய் | - | 85.6 | - | 516.4 | 342.9 | -33.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 163.0 | 290.0 | 77.9 | 1,911.3 | 3,086.0 | 61.5 |
| நிலக்கரி | 37.9 | 0.8 | -97.9 | 169.1 | 265.4 | 56.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 12.4 | 23.6 | 90.1 | 94.1 | 157.2 | 67.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 262.2 | 231.5 | -11.7 | 2,205.9 | 2,407.2 | 9.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 36.1 | 35.1 | -2.5 | 355.5 | 360.6 | 1.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 17.5 | 13.4 | -23.7 | 204.8 | 161.7 | -21.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 25.5 | 18.2 | -28.5 | 291.4 | 188.5 | -35.3 |
| அடிப்படை உலோகங்கள் | 66.9 | 12.7 | -81.0 | 566.1 | 282.7 | -50.1 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 52.2 | 49.4 | -5.3 | 570.8 | 514.3 | -9.9 |
| இரசாயன உற்பத்திகள் | 78.6 | 74.1 | -5.7 | 811.2 | 756.2 | -6.8 |
| வளமாக்கி | 0.4 | 6.3 | 1,373.4 | 104.4 | 104.5 | 0.1 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 24.8 | 26.6 | 7.2 | 290.6 | 284.2 | -2.2 |
| கனிம உற்பத்திகள் | 8.7 | 4.4 | -49.6 | 114.8 | 106.8 | -6.9 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 62.1 | 41.5 | -33.1 | 584.5 | 479.1 | -18.0 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **366.5** | **169.5** | **-53.7** | **3,248.8** | **2,433.0** | **-25.1** |
| பொறி மற்றும் கருவிகள் | 226.8 | 108.3 | -52.3 | 2,049.4 | 1,570.7 | -23.4 |
| கட்டடப் பொருட்கள் | 96.5 | 57.9 | -40.0 | 900.5 | 747.1 | -17.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 42.5 | 3.3 | -92.2 | 294.6 | 112.5 | -61.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.6 | 0.05 | -91.6 | 4.3 | 2.7 | -36.2 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.4** | **0.3** | **-14.8** | **8.0** | **8.1** | **1.4** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,526.0** | **1,284.4** | **-15.8** | **14,937.5** | **14,085.2** | **-5.7** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,325.1** | **907.9** | **-31.5** | **12,340.7** | **10,390.9** | **-15.8** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 325 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 359 மில்லியனிற்கு அதிகரித்து, 2022இன் இதுவரையிலான காலப்பகுதியில் உயர்ந்தளவிலான மாதாந்த பணவனுப்பல்களைப் பதிவுசெய்திருந்தன. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் 30,084ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் தேர்ச்சியற்ற (10,491), தேர்ச்சிபெற்ற (9,391) மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் (7,027) ஆகிய வகைகளை உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022இன் சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் 222,678ஆகப் பதிவுசெய்யப்பட்டு, உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னரான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த வருடாந்த நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகளை விஞ்சிக் காணப்பட்டன.

**சுற்றுலாப் பயணிகள்:** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட 37,760 வருகைகளிலிருந்து 2022 செத்தெம்பரில் 29,802இற்கு மிதமடைந்து காணப்பட்டன. 2022 செத்தெம்பர் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக இந்தியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 68 மில்லியனுடனும் முன்னைய ஆண்டின் செத்தெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 35 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 54 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 11: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 12: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் செத்தெம்பரில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த வேளையில், 2022 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கான ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 44 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2022 செத்தெம்பரில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது 2022 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 138 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2022 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 1.8 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கான உட்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிக்கும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை மத்திய வங்கி தொடர்ந்தும் நிரம்பல் செய்தது. இதன் விளைவாக 2022 செத்தெம்பர் இறுதியளவில் திரவ ஒதுக்கு மட்டமானது குறிப்பிடத்தக்களவிலான தாழ்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2022 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனாக விளங்கின.

**வரைபடம் 13: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**2022 மே மாத நடுப்பகுதியில் நாளாந்த அனுமதிக்கத்தக்க வீச்சின் அறிமுகத்தினைத் தொடர்ந்து 2022 செத்தெம்பர் முழுவதும் செலாவணி வீதம் தொடர்ந்தும் நிலையாகக் காணப்பட்டது.** இதற்கமைய, 2022 மே 13இலிருந்து இதுவரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக சிறியளவிலானதொரு தேய்வினைப் பதிவுசெய்திருந்த போதிலும் 2022 நவெம்பர் 04 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 44.9 சதவீத தேய்வொன்றினைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2022 நவெம்பர் 04 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பவற்றிற்கெதிராக தேய்வடைந்தது.

**வரைபடம் 14: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2020 | 2021 | 2022 (நவெம்பர் 04 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.6% | -7.0% | -44.9% |
| யூரோ | -11.2% | +1.1% | -36.1% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.2% | -6.0% | -33.5% |
| யப்பானிய யென் | -7.5% | +3.8% | -29.0% |
| அவுஸ்திரேலிய டொலர் | -11.4% | -1.2% | -36.6% |
| இந்திய ரூபா | 0.0% | -5.5% | -38.7% |

*தேய்வு(-)/உயர்வு(+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு I:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | செத்தெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | செத்தெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **223.9** | **238.1** | **6.4** | **2,019.5** | **2,024.6** | **0.3** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 24.9 | 18.7 | -24.8 | 216.6 | 229.7 | 6.0 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.0 | 6.9 | 14.5 | 50.2 | 57.6 | 14.8 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 38.9 | 38.6 | -0.6 | 338.0 | 350.7 | 3.7 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 139.9 | 156.5 | 11.9 | 1,278.6 | 1,196.2 | -6.4 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **9.3** | **11.0** | **18.7** | **99.2** | **104.5** | **5.3** |
| 11 குடிபானங்கள் | 2.6 | 4.0 | 51.3 | 23.0 | 37.3 | 62.0 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 6.6 | 7.0 | 5.7 | 76.2 | 67.2 | -11.8 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **37.5** | **33.9** | **-9.6** | **322.0** | **337.7** | **4.9** |
| 23 மசகு இறப்பர் | 5.2 | 3.4 | -35.0 | 33.2 | 33.6 | 1.3 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 20.2 | 16.2 | -19.5 | 180.6 | 178.7 | -1.0 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **53.7** | **30.0** | **-44.1** | **348.6** | **439.9** | **26.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 53.7 | 30.0 | -44.1 | 311.7 | 424.0 | 36.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | - | - | 36.9 | 15.9 | -56.9 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **9.8** | **5.4** | **-44.6** | **92.9** | **74.3** | **-20.0** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 6.9 | 5.4 | -21.8 | 61.6 | 61.0 | -1.1 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **24.1** | **25.6** | **6.0** | **211.9** | **210.1** | **-0.9** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **133.3** | **163.6** | **22.7** | **1,229.6** | **1,425.4** | **15.9** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 58.1 | 55.3 | -4.9 | 497.4 | 527.2 | 6.0 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 34.0 | 37.2 | 9.4 | 331.7 | 345.2 | 4.1 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 24.5 | 51.7 | 110.8 | 241.9 | 371.9 | 53.8 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **43.7** | **59.6** | **36.4** | **436.6** | **512.4** | **17.4** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 22.3 | 32.7 | 47.1 | 234.9 | 269.0 | 14.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **498.6** | **511.5** | **2.6** | **4,177.5** | **4,851.5** | **16.1** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 458.2 | 472.3 | 3.1 | 3,847.0 | 4,480.0 | 16.5 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.4** | **0.03** | **-94.4** | **0.8** | **0.8** | **3.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,034.5** | **1,078.9** | **4.3** | **8,938.5** | **9,981.1** | **11.7** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
... புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு II:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | செத்தெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | செத்தெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **151.3** | **155.4** | **2.7** | **1,685.3** | **1,602.0** | **-4.9** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 39.4 | 9.5 | -75.9 | 270.9 | 184.4 | -31.9 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 9.7 | 3.8 | -60.4 | 92.9 | 54.0 | -41.8 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 28.6 | 47.8 | 67.5 | 317.1 | 500.0 | 57.7 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 28.2 | 26.2 | -7.0 | 352.2 | 286.2 | -18.7 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 3.4 | 31.8 | 829.5 | 214.7 | 180.6 | -15.9 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 12.2 | 14.5 | 19.1 | 129.3 | 136.6 | 5.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **5.8** | **10.7** | **83.0** | **56.9** | **76.0** | **33.7** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **39.8** | **34.8** | **-12.6** | **420.3** | **381.8** | **-9.2** |
| 23 மசகு இறப்பர் | 21.2 | 22.6 | 6.3 | 255.1 | 242.6 | -4.9 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 1.5 | 2.6 | 78.4 | 16.0 | 21.5 | 34.5 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **200.9** | **376.4** | **87.3** | **2,596.8** | **3,694.3** | **42.3** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 137.9 | 351.4 | 154.8 | 2,168.6 | 3,244.3 | 49.6 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 25.1 | 24.2 | -3.5 | 259.1 | 184.7 | -28.7 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **19.1** | **3.2** | **-83.4** | **230.3** | **65.2** | **-71.7** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 18.1 | 2.4 | -87.0 | 212.3 | 53.4 | -74.9 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **236.4** | **171.8** | **-27.3** | **2,096.8** | **1,742.8** | **-16.9** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 104.2 | 43.1 | -58.7 | 595.5 | 369.4 | -38.0 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 0.4 | 6.3 | 1,368.5 | 103.9 | 104.3 | 0.4 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 37.1 | 29.8 | -19.7 | 419.1 | 351.5 | -16.1 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 12.3 | 16.5 | 35.0 | 124.3 | 133.9 | 7.7 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **485.2** | **359.3** | **-25.9** | **4,272.5** | **4,066.5** | **-4.8** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 32.0 | 32.0 | 0.2 | 337.4 | 337.4 | 0.0 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 259.7 | 223.5 | -13.9 | 2,167.2 | 2,355.1 | 8.7 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 41.5 | 39.8 | -4.2 | 378.5 | 392.3 | 3.6 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 78.7 | 17.5 | -77.8 | 691.2 | 392.3 | -43.2 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **309.6** | **119.3** | **-61.5** | **2,872.6** | **1,833.1** | **-36.2** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 51.0 | 17.6 | -65.5 | 486.5 | 324.5 | -33.3 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 43.1 | 20.5 | -52.4 | 456.9 | 353.5 | -22.6 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 30.7 | 9.9 | -67.9 | 249.4 | 133.5 | -46.5 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 65.4 | 12.0 | -81.7 | 609.0 | 182.6 | -70.0 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 52.5 | 44.8 | -14.8 | 538.0 | 504.8 | -6.2 |
| 78 வீதி ஊர்திகளி | 24.5 | 6.1 | -75.0 | 263.4 | 127.5 | -51.6 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **77.6** | **53.0** | **-31.7** | **696.9** | **613.8** | **-11.9** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 17.1 | 11.6 | -32.2 | 134.3 | 150.5 | 12.1 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 21.7 | 8.5 | -61.0 | 178.9 | 111.6 | -37.6 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.3** | **0.5** | **47.5** | **9.1** | **9.6** | **6.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,526.0** | **1,284.4** | **-15.8** | **14,937.5** | **14,085.2** | **-5.7** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf